நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜகோபாலன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 08–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.26 A.M.)

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 24.02.2025–ம் தேதி மாலை 6 மணிக்கு எனது கணவர் ராஜகோபால் டீக்குடிப்பதற்காக செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். கொஞ்ச நேரத்தில்

பேருந்து நிலையத்தில் இருக்கும் அங்கமுத்து என்பவர் என்னிடம் வந்து எனது கணவர் நடந்து செல்லும் போது பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொல்லி என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார். போய் பார்த்த போது எனது கணவருக்கு வலது கால் நசுங்கியும், இடது காலில் அடிபட்டும் இருந்தார். அதன் பிறகு முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு கோவை கங்கா மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்று இரவு 11 மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன்.

2. அங்கு எனது கணவரின் வலது காலை நீக்கி அறுவைசிகிச்சை செய்தார்கள். அறுவை சிகிச்சை முடிவுற்ற பிறகு அதிகாலை 5.25 மணிக்கு எனது கணவர் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். மேற்படி மேட்டூர் அரசு மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எனது கணவர் பேருந்து நிலையத்திற்கு உள்ளே வரவும், அப்போது பேருந்து நிலையத்திற்கு உள்ளே வந்த அந்தியூர் செல்லும் அரசு பேருந்து என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக விசாரித்து தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் கையெழுத்து போட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும், படித்து காட்டினார்கள். விபத்து நடந்த 10 நிமிடத்தில் எனக்கு தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். குறிப்பாக யார் விசாரித்தார்கள் என்று தெரியாது. அரசு பேருந்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் அரசு பேருந்தின் பதிவு எண்ணை நான் சொல்லவில்லை, எனக்கு தெரியாது.

2. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் வாகனத்தின் பதிவு எண்ணை நான்

சொல்லி அவர்கள் எழுதவில்லை. பேருந்து ஓட்டுநரை நான் பார்த்ததில்லை. பேருந்தை இயக்கியது யார் என்று எனக்கு தெரியாது. நான் கேள்விபட்டவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், இந்த விபத்திற்கு எனது கணவரின் கவனக்குறைவுதான் காரணம் என்றாலும், இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

(விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.40 A.M.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**